23.07.2025

OS No:316/2019

வா.சா. 2 திரு. வீரமணி த/பெ ராமசாமி

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1ம் வாதி மாணிக்கம் எனக்கு உறவா என்றால் சித்தப்பா ஆவார். மேற்படி மாணிக்கம் 1ம் பிரதிவாதி அவையனுக்கு கடன் கொடுத்திருந்தாரா என்றால் இல்லை. தாவா நிரூபண வாக்குமூலத்தில் நான் குறிப்பிடும் கிரைய பத்திரத்திற்கு முன்னர் வேறு சொத்தை குறித்து மாணிக்கத்திற்கும், அவையனுக்கும் கிரைய ஒப்பந்த பத்திரம் ஒன்று ஏற்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட கிரைய பத்திரத்திற்கு முன்னால் மாணிக்கம் மேற்படி சொத்திற்கான வில்லங்கம் பார்த்தாரா, சொத்தின் உரிமையாளர் யார் என விசாரித்தாரா என்றால் எனக்கு தெரியாது. தாவா வழக்கு எத்தனை இலக்க சொத்துக்களுக்கு போடப்பட்டது என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட கிரைய பத்திரத்தில் கண்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. 1 மற்றும் 3ம் பிரதிவாதி மாணிக்கத்திற்கு கிரையம் கொடுத்த சொத்திற்கு தங்களுக்கு எந்த வகையில் உரிமை பாத்தியம் உள்ளது என எந்த ஆவணங்களை காண்பித்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. கிரைய பத்திரமானது எத்தனை ரூபாய் பத்திரங்களில் தயார் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கிரைய பத்திரம் எழுதி வைத்த பின்பு தான் சாட்சி கையெழுத்து செய்வதற்காக நான் சென்றேன் என்றால் சரிதான். கிரைய பத்திரம் எதற்காக எழுதப்பட்டது என்றும் அவர்களுக்கிடையே முன் பரிவர்த்தனை விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்றும், மாணிக்கம் எனக்கு சித்தப்பா உறவு என்பதால் பத்திரத்தின் விவரம் தெரியாமல் சாட்சி கையெழுத்து மட்டும் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது 2ம்பிரதிவாதி நாச்சம்மாளுக்கு பாத்தியமானது என்றும் 1 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1, 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் பாத்தியம் இல்லை என்பதால் பாத்தியம் இல்லாத நபர்களிடம் கிரையம் பெற்ற வாதி

மாணிக்கத்திற்கு தாவா சொத்தில் உரிமை கொண்டாட எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கில் குறிப்பிடப்படும் கிரையப்பத்திரமானது அவையனுக்கு கொடுத்த கடன் தொகைக்காக ஒரு ஆதரவுக்காக எழுதி கொடுக்கப்பட்டது என்றும் அந்த விவரம் எனக்கு தெரிந்தும் வழக்கிற்காக பொய்யாக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொன்னது போன்று கிரைய தொகை எதுவும் பேசவில்லை என்றும், கிரைய தேதியில் கிரைய தொகை எதுவும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம்பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்திட தயாராக உள்ளார் என்றும் சொத்தின் மதிப்பு அதிகம் என்பதால் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நானும் எனது சித்தப்பாவும் சேர்ந்து தாவா வழக்கை மோசடியாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**(1 மற்றும் 3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை - 2ம் பிரதிவாதி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.)**

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.07.23 18:05:50 +0530